முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பாலசுப்பிரமணியம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜமாணிக்கம் | கிராமம் | : பொங்குபாளையம் | |
| வயது | : 58 | தாலூக்கா | : திருப்பூர் | |
| நாள் | : 06-08-2025 | மாவட்டம் | : திருப்பூர் | |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. தாவாவின் வாதி மற்றும் 2 ம் பிரதிவாதி உடன் பிறந்த சகோதரர்கள், 3 மற்றும் 4 பிரதிவாதிகள் என் சகோதரிகள் என்றால் சரிதான். என் அம்மா எந்த ஆண்டு இறந்தார் என்றால் கடந்த 12.07.2020 ம் தேதி இறந்தார். என் தாயாரின் காரியங்கள் நடந்த அடுத்த நாளே வாதிக்கும் 4 ம் பிரதிவாதிக்கு சொத்து பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரிதான், தாவாவின் 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன்.

2. தாவாவில் சொல்லி உள்ள உயில் சாசனத்தை நான் எப்போது படித்துப் பார்த்தேன் என்றால் இதுநாள் வரை நான் உயில் சாசனத்தை படித்துப் பார்க்கவில்லை. தாவாச் சொத்தை என் அம்மா எந்த தேதியில் கிரயம் பெற்றார் என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் உள்ள இடத்தை என் அம்மா கிரயம் பெற்றார் என்றால் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ப்ளஸ் டு படித்துள்ளேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால் சொத்துக்கான எந்த ஆவணங்களை பார்க்கவேண்டும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான்.

3. என் அம்மா தாவா சொத்தில் எந்த ஆண்டு வீடு கட்டினார் என்றால் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டினார். 4 ம் பிரதிவாதிக்கு எந்த ஆண்டு திருமணமானது

என்றால் சரியாக தெரியாது. 4ம் பிரதிவாதி திருணமாகி கர்ப்பமான பிறகு என் அம்மாவுடன் என் அம்மா இறக்கும் வரை உடன் இருந்தார் என்றால் சரிதான். என் அம்மா கடன் வாங்கி வீடு கட்டினார் என்றால் சரிதான். வீடு கட்ட கடனை என் அம்மாவும் 4ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. கடன் பெற்றதற்கான அடமானப் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

4. என் அம்மா கடனுக்கு தொகை செலுத்திய விவரம் அதற்கான ரசீதுகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசல் ஆவணம் எங்கு, யாரிடம் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் அம்மாவின் உடல் நிலை பற்றிய விவரங்கள் மருத்துவ சிகிச்சை பெற்ற விவரங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த பிறகாவது உயில் ஆவணம், அடமான பத்திரம், அசல் ஆவணம் ஆகிய விவரங்களை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா தாக்கல் செய்த பிறகு எனக்கும் என் உடன் பிறந்தவர்களுக்கும் எந்த பேச்சு வார்த்தையும் இல்லை என்றால் சரிதான். என் தம்பி 4ம் பிரதிவாதியின் மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் இல்லை.

5. என் அம்மா 4ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் சாசனம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றாலும், என் அம்மா இறந்த பிறகு உயில் சாசனம், அசல் கிரய ஆவணம் ஆகியவற்றை 4ம் பிரதிவாதியிடம் நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு உயில் சாசனத்தை கொடுத்தபோது நாங்கள் அனைவரும் உயில் ஆவணத்தின் நகல் எடுத்து வைத்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தின் நகல் என்னிடமும், வாதியிடமும் மற்ற பிரதிவாதிகளிடமும் உள்ளது என்றும் அதனால் தான் அந்த உயில் ஆவணத்தின் சங்கதிகளை நான் தெரிந்து கொண்டபடியால் நகல் எடுத்து பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

6. என் அம்மா 4ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் உண்மையானது என்பதால் தான் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் பங்கு எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. வீடு கட்ட பெறப்பட்ட கடன் தொகையை 4ம்

பிரதிவாதி தனது வருமானத்தில் செலுத்தினார் அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால்சரியல்ல. என் அம்மா தான் செலுத்தி வந்தார். கடன் தொகையை எந்த ஆண்டு கட்டி முடித்தார்கள் என்ற விவரம் எனது எதிர்வாதத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணம் உண்மையானது அதனால் வாதிக்கும் எனக்கும் தாவாச் சொத்தில் எந்த பங்கும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மை விவரங்களை தெரிந்து கொண்டு நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.